ஸ்ரீ ராமஜயம்

ராகம் : மோஹனம்

தாளம் : ஆதி

# பூலோகம் போற்றுகின்ற புருஷோத்தமா நீ பூமி யாவும் போற்றுகின்ற திருமலை தெய்வமா (பூலோகம்)

1. ராதா ருக்மிணிக்கி ஸ்ரீ கிருஷ்ணனா இல்லை ஸ்ரீரங்கத்தில் சயனம் கொண்ட ரெங்கநாதனா பாதம்பணிந்திடுவோர்க்கு பரந்தாமனா இல்லை பாவமே போக்கிட வந்த ஸ்ரீனிவாஸனா (பூலோகம்)

2. கேட்டதெல்லாம் வழங்கும் திருவரதனாபக்தர் குறையெல்லாம் போக்குகின்ற சாரங்கனாபாட்டினில் பொருளாய் பதியும் ஜெகந்நாதனா! நீ பரிக்கல்லில் ஆட்சி செய்யும் லெஷ்மி நரஸிம்மனா (பூலோகம்)

3. காணுகின்ற கண்களுக்கு நீல மேகனா காலத்தில் கைகொடுக்கும் லோகநாதனாருக்கு ரக்ஷகனான அம்ருதபுரி வாஸனா தேசமெங்கும் ஆட்சி செய்யும் கோவிந்தராஜனா (பூலோகம்) ஜெய் சீதாராம்.

மதுரவல்லியே எனதன்னையே எந்தன் கோரிய வரங்களை அளிக்கும் மஹா லெஷ்மியே.

இப்புவியில் எல்லார்க்கும் இரங்கிடும் தேவியே இத்தருணம் என்னை இன்புறச் செய்வாயே (மதுரவல்லி)

சரணம்

ராமானுஜ யோகவனத்தில் விளங்கிடும் அம்பிகையே ரக்ஷிக்கும் அன்புடன் நம்மை ரக்ஷிக்கும் அம்மாவே ரக்ஷகியே. பக்த ரஷ்ஷகியே பாபவிமோசனியே. பக்தர்கள் அனைவர்க்கும் பாக்யமும் அளிப்பாயே (மதுரவல்லியே)

ஜெய்சீதாராம்
ராஜலக்ஷ்மி

ராகம்: ஹிந்தோளம்

எங்கள் இதய தெய்வமே ஸீதாராமரே!
தங்கள் பாதம் சரணடைந்தோம் ஸீதாரமரே!
தாராமாதா ஸமேதரே ஸ்தாராமரே!
ஆதாரமே நீர்தானய்யா ஸீதாராமரே!

செல்லம்மாவின் செல்வக்கனியே ஸீதாராமரே!
ஸ்ரீநிவாசன் வாசம் செய்யும் ஸீதாராமரே!
நால்வேதப் பொருளே எங்கள் ஸீதாராமரே!
நாளும் எமக்கு நன்மை புரியும் ஸீதாராமரே!

எளிமையின் உறைவிடமே எம் ஸீதாராமரே!
ஏழையென்னை வாழவைத்தாய் ஸீதாராமரே!
எண்ணிலா மகிமை புரியும் ஸீதாராமரே!
தண்ணிலவே தயாபரணே ஸீதாராமரே!

சத்சங்கம் எமக்களித்தாய் ஸீதாராமரே!
சாந்தவழி போதித்தாய் ஸீதாராமரே!
வைணவத்தின் விடிவிளக்கே ஸீதாராமரே!
வானும் நிலவும் உள்ளளவும் போற்றுவோம் உமையே!

---

## மருத்துவ முகாம்



அம்ருதபுரி ஸ்ரீ இராமானுஜ யோகவனத்தில் 03.11.2013ல் நடந்த 173வது மருத்துவ முகாமில்

| | |
|---|---|
| **சிகிச்சை பெற்ற ஆண்மக்கள்** | **50** |
| **பெண்களும், சிறுவர்களும்** | **81** |
| **மொத்தம்** | **131** |

இனிவரும் மாதங்களிலும் இம்மாதிரி ஏழை மக்களுக்கும், மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற முடியாத பெரியோர்களுக்கும் தொடர்ந்து இந்தத் தொண்டினைச் செய்ய விரும்புகிறோம். அனைவரது ஒத்துழைப்பையும் நாடுகிறோம்.

***அடுத்த 174-வது மருத்துவ முகாம் 01.12.2013 அன்று நடைபெறும்.***

# நமோ நாராயணா

நமோ நமோ ஹரிநாராயணா!
நமோ நமோ ஸ்ரீமன் நாராயணா!
நமோ நமோ லட்சுமி நாராயணா!
நமோ நமோ பத்ரி நாராயணா!

1. அம்ருதபுரிதனில் வாழ்பவனே
ஆனந்த வாழ்வை அளிப்பவனே
பேசும் பெருமான் நீயன்குரு!
ஸீதாராம் உன் யெரன்றோ!

(நமோ)

2. திருவோண தீபமாய் ஒளிர்பவனே!
அருள் மழை பொழிந்து காப்பவனே!
தீராவினைகள் தீர்ப்பவனே!
திவ்ய தரிசனம் தருபவனே!

(நமோ)

3. யோகவனத்தில் நின்றருள்வாய்!
ஸீதாராமனாய் வந்துதித்தாய்!
குருவாய்திருவாய் அருளவந்தாய்!
உன்திருவடியில் சரண்புகுந்தேன்!

(நமோ)

4. அனுமன் கோட்டையில் அருள்பவனே!
அனுதினம் உன்புகழ் பாடிடுவேன்!
சீதாராமனாய் உனைக்கண்டேன்!
சரணம் சரணம் கோவிந்தா!

(நமோ)



- துபாய் ஸ்ரீதரன்